ஏமனில் மூழ்கிய படகு: 46 பேர் கதி என்ன?

ஜெனிவா, ஜூன் 7–

ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து ஆண்டுதோறும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐரோப்பாவில் சட்டவிரோதமாக குடியேறி வருகின்றனர். அதற்கு அம்மக்கள் ஏமன் நாட்டினை நுழை வாயிலாக பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், எத்தியோப்பியாவை சேர்ந்த அகதிகள் சட்டவிரோதமாக ஒரு படகில் ஏமனுக்கு வந்து கொண்டிருந்தனர். அந்த படகில் 100க்கு மேற்பட்ட அகதிகள் இருந்தனர். இதில் 83 ஆண்களும், 17 பெண்களும் அடங்குவர்.

இந்த படகு ஏமன் அருகே வந்தபோது கடல் கொந்தளிப்பு காரணமாக கடலில் மூழ்கியதில் 46 பேர் மூழ்கினர். தகவல் அறிந்து அங்கு சென்ற மீட்புப்படையினர் மாயமான 46 அகதிகளை தேடி வருகின்றனர்.

பாராளுமன்ற தேர்தலில் பாஜகவுடன் கூட்டணி இல்லை: சிவசேனா

மும்பை, ஜூன் 7–

மகாராஷ்டிரா மாநிலத்தில் பாரதீய ஜனதா – சிவசேனா கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. சமீபத்தில் பாரதீய ஜனதா – சிவசேனா இடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் காரணமாக விரிசல் ஏற்பட துவங்கியது. இதையடுத்து, சிவசேனா கட்சித்தலைவர் உத்தவ் தாக்ரே பாரதீய ஜனதாவுடனான கூட்டணியை முறித்துக் கொள்வதாகவும், இனி வரப்போகும் அனைத்து தேர்தல்களிலும் தனித்து போட்டியிடப்போவதாகவும் அறிவித்தார்.

இந்த அறிவிப்பினால் பாரதீய ஜனதா தலைமை சற்றே நிலைகுலைந்தது. 2019ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், சிவசேனாவின் இந்த அறிவிப்பு பாரதீய ஜனதாவுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து, சிவசேனாவுடன் மீண்டும் கூட்டணியை அமைக்க பாரதீய ஜனதா தலைவர்கள் முயற்சித்து வருகின்றனர். நேற்று பாரதீய ஜனதாவின் தலைவர் அமித் ஷா சிவசேனா கட்சித் தலைவர் உத்தவ் தாக்ரேவை நேரில் சந்தித்து பேசினார்.

இந்நிலையில், அமித் ஷாவுடனான சந்திப்பு குறித்து பேசிய சிவசேனா எம்.பி. சஞ்சய் ராவத், இனி வரும் அனைத்து தேர்தல்களிலும் சிவசேனா தனித்து போட்டியிடும் என முன்னதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா சாலை விபத்தில் 10 பேர் பலி

மும்பை, ஜூன் 7–

மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டத்தில் உள்ள சந்த்வட் பகுதியில் இன்று அதிகாலை லாரி மீது மினி பஸ் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பஸ்சில் பயணம் செய்த 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 12 பேர் படுகாயமடைந்தனர்.

லாரி டயர் பஞ்சர் ஆனதால் சாலையோரம் நின்று கொண்டிருந்தது. அப்போது அந்த வழியாக வந்த மினி பஸ் லாரி மீது மோதி விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை உயர்த்திய ரிசர்வ் வங்கி

வீடு, வாகன கடன்கள் வட்டி உயரும்

புதுடெல்லி, ஜூன் 7–

வீடு, வாகன கடன்களுக்கான வட்டி விகிதத்தை உயர்த்த ரிசர்வ் வங்கி திட்டமிட்டுள்ளது.

மத்தியில் பாரதீய ஜனதா அரசு பதவியேற்ற 4 ஆண்டுகளுக்குப் பிறகு ரெப்போ விகிதத்தை 0.25 சதவிகிதம் ரிசர்வ் வங்கி உயர்த்தியுள்ளது.

ரெப்போ ரேட் உயர்வு காரணமாக வங்கிகள், வீட்டுக்கடன், வாகனக்கடன் வட்டி விகிதத்தை உயர்த்த வாய்ப்புள்ளது.

ரெப்போ விகிதத்தை உயர்த்துவதற்கு நிதிக் கொள்கை குழு ஒருமனதாக வாக்களித்துள்ளனர். பிரதமர் மோடி ஆட்சிக்கு வந்த பிறகு முதன் முறையாக வட்டி விகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. சர்வதேச நிதிச் சந்தையில் நிலவும் மாற்றங்களால், தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலதனப் பொருள்களின் விலை அதிகரிப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, ரிசர்வ் வங்கி ரெப்போ ரேட் விகிதத்தை அதிகரித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் முதல் 6 மாதங்களில் பணவீக்க விகிதம் 4.8% முதல் 4.9% ஆக இருக்கும். மேலும் ரெப்போ வட்டி உயர்வால் வீடு, வாகன கடன்களுக்கான வட்டி அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

ரிசர்வ் வங்கியின் நாணய கொள்கை குழு கூட்டம் கவர்னர் உர்ஜித் படேல் தலைமையில் திங்கட்கிழமை காலை தொடங்கி நடைபெற்று வந்தது. இதில் ரெப்போ, மற்றும் ரிவர்ஸ் ரெப்போ வட்டி விகிதங்களை உயர்த்த முடிவு செய்யப்பட்டது. ரிசர்வ் வங்கி, மற்ற வங்கிகளுக்கு கொடுக்கும் பணத்திற்கான வட்டி விகிதமே ரெப்போ வட்டி விகிதம் ஆகும். 4 ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருந்த ரெப்போ வட்டி விகிதத்தை ரிசர்வ் வங்கி தற்போது 6 சதவீதத்தில் இருந்து 6.25 சதவிதமாக உயர்த்தி இருக்கிறது. பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் விதித்தல் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் வீடு, வாகன கடன்களுக்கான வட்டி விகிதம் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது.

சம்பளம் வழங்காத ஏர் இந்தியா: ஊழியர்கள் தவிப்பு

புதுடெல்லி, ஜூன் 7–

மே மாத சம்பளத்தை வழங்காததால் ஏர் இந்தியா ஊழியர்கள் தவித்து வருகின்றனர்.

மத்திய அரசு சார்பில் நடத்தப்படும் விமான நிறுவனம் ஏர் இந்தியா ஆகும். கடந்த சில ஆண்டுகளாக சரியாக லாபம் இல்லாததால், போட்டியை சமாளிக்க முடியாததால் பணியாளர்களுக்கே ஊதியம் தர முடியாத நிலைக்கு சென்றது.

இந்தநிலையில், ஏர் இந்தியா நிறுவனத்தின் பெருகி வரும் நிர்வாக செலவுகளும், லாபமற்ற வர்த்தக நடைமுறைகளையும் கருத்தில் கொண்டு அந்நிறுவனத்தை தனியார்மயமாக்க மத்திய அரசு முடிவெடுத்தது.

இதற்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்தனர். மத்திய அரசின் இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஏர் இந்தியா நிறுவனத்தில் பணியாற்றி வருபவர்கள் வேலைநிறுத்த போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

ஆனால், ஏர் இந்தியா நிறுவனத்தை தனியார்மயமாக்கும் மத்திய அரசின் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என விமான போக்குவரத்துத்துறை அமைச்சகம் உறுதியாக தெரிவித்தது.

ஏர் இந்தியா நிறுவனத்தின் 76 சதவிகித பங்குகளை தனியாருக்கு விற்பனை செய்து தனியார்மயமாக்க மத்திய அரசு முடிவெடுத்தது.

சில வெளிநாட்டு நிறுவனங்கள், இண்டிகோ போன்றவை கூட ஏர் இந்தியாவை வாங்க உள்ளதாக தகவல் வெளியானது. ஆனால் எதுவும் நடக்கவில்லை. மத்திய அரசு வெளிப்படையாகவே ஏர் இந்தியாவை வாங்கலாம் என அறிவித்தது. பலரும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். ஏர் இந்தியாவை மீட்டு, அரசே இயக்க வேண்டுமெனவும் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் தொடர் நஷ்டம் காரணமாக மத்திய அரசு முடிவில் இருந்து பின்வாங்கவில்லை

இந்தநிலையில் ஏர் இந்தியா நிறுவனத்தில் நிதி இல்லாததால் கடந்த மே மாத சம்பளத்தினை ஏர் இந்தியா ஊழியர்களுக்கு வழங்கபடவில்லை.

வழக்கமாக மாதத்தின் கடைசி நாளான 30 அல்லது 31ம் தேதிகளில் அந்த மாதத்திற்கான சம்பளம் கிடைத்துவிடும்.

ஆனால் மே மாதம் முடிந்து ஜூன் மாதம் 7ம் தேதி ஆகியும் ஏர் இந்திய நிறுவன ஊழியர்களுக்கு சம்பளம் கைக்கு கிடைக்கவில்லை. சம்பளம் கிடைக்காமல் தவித்து வருகின்றனர்.

நிபாவை தொடர்ந்து கேரளாவை பயமுறுத்தும் கருப்பு காய்ச்சல்

திருவனந்தபுரம், ஜூன் 7–

நிபா வைரசை தொடர்ந்து கேரளாவை தற்போது கருப்பு காய்ச்சல் நோய் பயமுறுத்தி வருகிறது.

கேரளாவின் மலப்புரம், கோழிக்கோடு மாவட்டங்களில் நிபா வைரஸ் காய்ச்சல் பரவியது.

இந்த நோய்க்கு நர்சு உள்பட 18 பேர் பலியானார்கள். இன்னும் பலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்த நோய் வவ்வால் மூலம் பரவுவதாக கூறப்பட்டது. ஆனால் அது இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

இந்த நிலையில் நிபா வைரஸ் காய்ச்சல் மேலும் பரவாமல் இருக்க மத்திய சுகாதாரக்குழு மற்றும் மாநில சுகாதாரத்துறையினர் இணைந்து தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தனர். இதனால் கேரளாவில் தற்போது நிபா வைரஸ் கட்டுக்குள் வந்துள்ளது.

நிபா வைரஸ் பீதி மெல்ல மெல்ல குறைந்து வரும் நிலையில் கொல்லம் மாவட்டம் மலைக்கிராம பகுதியில் புதிய வகை காய்ச்சல் பரவுவதாக தகவல் வெளியானது. இப்பகுதியைச் சேர்ந்த 38 வயது வாலிபர் ஒருவர் வயிற்று வலி மற்றும் கல்லீரல் வீக்கம் காரணமாக அப்பகுதி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார்.அவரை பரிசோதித்த போது அவருக்கு கருப்பு காய்ச்சல் என்ற அரிய காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் டாக்டர்களுக்கு ஏற்பட்டது. எனவே அவர், திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கருப்பு காய்ச்சல் மண் பூச்சிகள் மூலம் பரவும் என்று கூறப்படுகிறது. இது நிபா வைரஸ் போல வேகமாக பரவும் தன்மை கொண்டது இல்லை என்றும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நோய் பாதிப்பை உடனடியாக கண்டுபிடிக்க முடியாது.

இக்காய்ச்சல் ஏற்பட்டவர்களுக்கு வயிற்று வலியும், உடல் சோர்வும் ஏற்படும். கல்லீரல், மண்ணீரல் வீக்கமும் உருவாகும். ரத்த பரிசோதனை மூலமே இந்நோயை கண்டுபிடிக்க முடியும் என டாக்டர்கள் கூறி உள்ளனர்.

பிரதமர் மோடியுடன் தமிழக கவர்னர் சந்திப்பு

புதுடெல்லி, ஜூன் 7–

பிரதமர் மோடியை கவர்னர் பன்வாரிலால் புரோகித் நேரில் சந்தித்து பேசினார்.

டெல்லியில் மாநில கவர்னர்கள் கலந்துகொள்ளும் 2 நாள் மாநாடு கடந்த 3–ம் தேதி தொடங்கியது. கவர்னர்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் துணை நிலை கவர்னர்கள் பங்கேற்ற மாநாடு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தொடங்கி வைத்தார். குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு, பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் கவர்னர் மாநாட்டில் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக தமிழக கவர்னர் பன்வாரிலால் புரோகித் டெல்லி சென்றிருந்தார். கவர்னர்கள் மாநாடு நிறைவடைந்த நிலையில் பன்வாரிலால் புரோஹித் நேற்று மத்திய அமைச்சர்களை டெல்லியில் சந்தித்தார்.

இந்நிலையில் இன்று பிரதமர் மோடியை பன்வாரிலால் புரோகித் சந்தித்துப் பேசினார். அப்போது தமிழக நிலவரம் குறித்து விவாதித்திருக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரம்: மும்பைக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

மும்பை, ஜூன் 7–

தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு முன்கூட்டியே தொடங்கியது. கேரளா மற்றும் தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

இதேபோல் மகாராஷ்டிராவின் கடலோர மாவட்டங்களிலும், தெலுங்கானா, ராயலசீமா கடலோர ஆந்திராவிலும் தென்மேற்கு பருவமழை தொடங்கியது.

நாளை முதல் தென் மேற்கு பருவமழை மேலும் தீவிரம் அடையும் என்றும், மும்பை மற்றும் புறநகர் பகுதிகளிலும் கடலோர மாவட்டங்களிலும் நாளை முதல் 5 நாட்களுக்கு பலத்த மற்றும் மிக பலத்த மழைக்கு வாய்ப்பு இருப்பதாக டெல்லியில் உள்ள இந்திய வானிலை மையம் எச்சரித்துள்ளது.

இதனால் மும்பைக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மராட்டியத்தின் ரத்னகிரி மற்றும் சிந்து துர்க் மாவட்டங்களில் இன்றும், நாளையும் மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மகாராஷ்டிர அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், வானிலை ஆய்வு மைய அறிக்கையின்படி மும்பை மற்றும் கொங்கன் பகுதிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் அவசர நிலைமைகளை எதிர் கொள்ள தயாராக இருக்குமாறு மாநில பேரிடர் மீட்பு குழுவிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மந்த்ராலயா பகுதி கட்டுப்பாட்டு அறைகள், மாவட்ட கலெக்டர்கள், மாநகராட்சி மற்றும் தாசில்தார் அலுவலகங்கள் 24 மணி நேரமும் உஷாராக இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

IDBI trustee

IDBI Trusteeship Services Ltd

பதிவு அலுவலகம்: ஏஷியன் பில்டிங், தரை தளம், 17, R. காமனி மார்க், பல்லார்ட் எஸ்டேட், மும்பை–400 001.

இணைப்பு ஏ

லட்சுமி விலாஸ் வங்கியின் பத்திரம் வழங்கல் மீது

மெசர்ஸ் CARE–ன் திருத்தப்பட்ட ரேட்டிங் கீழ்க்கண்டவாறு உள்ளது

இன்ஸ்ட்ரூமெண்ட்	தொடர்	திருத்தப்பட்ட ரேட்டிங்	குறிப்புகள்	ஐஎஸ்ஐஎன் எண்.
ஈடுபெறாத திரும்ப பெறத்தக்க மாற்ற முடியாத சப் ஆர்டினேட் லோயர் டயர் II பத்திரங்கள்	தொடர் VII (விருப்பம் B)	CARE BBB + (டிரிபிள் பி பிளஸ்)	CARE Aலிருந்து திருத்தப்பட்டது (Single A Minus)	INE694C08047
	தொடர் VIII	CARE BBB + (டிரிபிள் பி பிளஸ்)	CARE Aலிருந்து திருத்தப்பட்டது (Single A Minus)	INE694C08054
	தொடர் IX	CARE BBB + (டிரிபிள் பி பிளஸ்)	CARE Aலிருந்து திருத்தப்பட்டது (Single A Minus)	INE694C08062
	தொடர் X	CARE BBB + (டிரிபிள் பி பிளஸ்)	CARE Aலிருந்து திருத்தப்பட்டது (Single A Minus)	INE694C08070

RELIANCE HOME FINANCE

ரிலையன்ஸ் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

கிளை அலுவலகம்: ரிலையன்ஸ் ஹோம் பைனான்ஸ் லிமிடெட், எண்–5, ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006.

கார்ப்பரேட் & பதிவு அலுவலகம் : ரிலையன்ஸ் சென்டர், 6வது தளம், சவுத் விங், பிரபாத் காலனி அருகில், சாந்தா குரூஸ் (கிழக்கு), மும்பை – 400 055

கோரிக்கை அறிவிப்பு

கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/ உடன் கடன்தாரர்கள் / உத்தரவாததாரர்கள்/அடைமானதாரர்கள் ஆகியோர் ரிலையன்ஸ் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டில் இருந்து நிதி உதவி பெற்றுள்ளனர். கடன் பெற்ற கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர்கள்/ அடைமானதாரர்கள் ஆகியோர் பல்வேறு காரணங்களால் தவணைத் தேதிக்கு முன்னதாக அசல் தொகை மற்றும் வட்டியை செலுத்தத் தவறி விட்டனர். ரிலையன்ஸ் ஹோம் பைனான்ஸ் புத்தகத்தில் உள்ளபடி, சொத்து வகைப்பாடு தொடர்பாக நேஷனல் ஹவுசிங் வங்கியால் வழங்கப்பட்ட உத்தரவின் கீழ் ரிலையன்ஸ் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அந்த கணக்குகள் கீழ்குறிப்பிட்டுள்ள தேதியில் நிறைவேற்றப்படாத ஆஸ்திகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002 விதிகள் மற்றும் மேற்கண்ட சட்டம் பிரிவு 13(12) விதி 3ன்படி அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மேற்கண்ட சட்டம் பிரிவு 13 (2)ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பி உள்ளார். இதில் தொடர்புடைய கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடைமானதாரர்கள் அறிவிப்பில் கண்டுள்ள தொகை மற்றும் கூடுதல் வட்டி மற்றும் அறிவிப்பில் கண்டுள்ள ஒப்பந்தவிகிதத்திலான தொகை மற்றும் தற்செயல் செலவு, கட்டணம், இன்றைய தேதி வரையிலான கட்டணங்களை இந்த அறிவிப்பு வெளியான தேதியில் இருந்து 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எங்களுக்கு கடைசியாக தெரிந்த முகவரிக்கு இந்த அறிவிப்புகள் அனுப்பப்பட்டு அது அவர்களால் பெறப்படாமல் திரும்ப வந்துவிட்ட காரணத்தால் அது பொது அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கடன்தாரர் பெயர்/ முகவரி	உடன் கடன்தாரர் மற்றும் உத்தரவாதர் பெயர்	என்பிஏ தேதி	கோரிக்கை அறிவிப்பு தேதி	நிலுவைத் தொகை	கடன் தொகை	ஈடுபெற்ற ஆஸ்திகளின் முகவரி
வில்லியம் விக்னேஷ் எண். 62, திருவேங்கடம் தெரு, 1வது மாடி, புதுப்பேட்டை, சென்னை 600 002	மைக்கேல் S எண். 62, திருவேங்கடம் தெரு, 1வது மாடி, புதுப்பேட்டை, சென்னை 600 002	11.05.2018	02.06.2018	31.05.2018 அன்று ரூ.26,50,918/- (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து ஐம்பது ஆயிரத்து தொள்ளாயிரத்து பதினெட்டு மட்டும்)	ரூ. 25,35,000/- (ரூபாய் இருபத்தைந்து லட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்)	கதவு எண். 42/47, காமராஜ் அவென்யூ முதல் தெரு, அடையாறு (Rs No.21/1 பகுதி, டிஎஸ் எண்.38, பிளாக் எண். 10) சென்னை 600 020

மேலே கூறப்பட்டுள்ள சூழ்நிலையில், மேற்கண்ட கடன்தாரர்கள் உடன் கடன்தாரர்கள் மற்றும்/அல்லது அவர்களின் உத்தரவாததாரர்கள் (எது பொருந்துமோ) ஆகியோர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகை மற்றும் எதிர்கால வட்டி மற்றும் பொருந்தக்கூடிய கட்டணங்கள் ஆகியவற்றை இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு தவறும்பட்சத்தில் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 விதிகள் மற்றும் ஈடுபெற்ற மற்றும் நிதி சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் சீரமைப்பு பிரிவு 13(4)ன் கீழ் இந்த விளம்பரம் வெளியான தேதியிலிருந்து 60 நாட்களுக்கு பிறகு கூடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஈடுபெற்ற ஆஸ்திகள் சுவாதீனம் எடுக்கப்படும்.

மேற்கண்ட சட்டம் பிரிவு 13 (13)ன் கீழ், எந்த கடன்தாரரும் அறிவிப்பில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யவோ, குத்தகைக்கு விடவோ மற்றும் ஈடுபெற்ற ஆஸ்திகள் மீது எந்தவித நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ, ஈடுபெற்ற கடனாளரால் எழுத்துபூர்வமான அறிவிப்பு இல்லாமல் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது.

இடம் : சென்னை

தேதி: 07.06.2018

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

ரிலையன்ஸ் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

பெயர் மாற்றம்

Dimple Babulal Jain, கணவர் பெயர்: Lalith Kumar, பிறந்த தேதி: 25.04.1988, எண்.838/A, பெல்லி ஏரியா, G–பிளாக், 16வது தெரு, அண்ணா நகர், சென்னை–600 040, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **DIMPLE BHOOTRA,** என்று அழைக்கப்படுகிறேன்.

Dimple Babulal Jain

பெயர் மாற்றம்

M.JEYACHITHRA, கணவர் பெயர்: Rajendiran, பிறந்த தேதி: 19.04.1973, எண்.167, 168, பேஸ்–1, மாணிக்கம் நகர், குன்றத்தூர், சென்னை–600 069, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **JAYACHITRA,** என்று அழைக்கப்படுகிறேன்.

M.JEYACHITHRA

பெயர் மாற்றம்

KRISHNAMURTHY BASKAR, தந்தை பெயர்: Krishnasamy, பிறந்த தேதி: 19.08.1964, எண்.33/53, மூர்த்தி நகர் தெரு, வியாசர்பாடி, சென்னை–600 039, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **KRISHNASAMY BASKER,** என்று அழைக்கப்படுகிறேன்.

KRISHNAMURTHY BASKAR

பெயர் மாற்றம்

APPANRAJ, தந்தை பெயர்: Selva Kumar, பிறந்த தேதி: 4.11.1992, எண்.2–16, ஜெயின் தெரு, விழுக்கம் (V) அஞ்சல், விழுப்புரம் மாவட்டம் – 604206, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **APPANDAIRAJAN,** என்று அழைக்கப்படுகிறேன்.

APPANRAJ

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

சேப்பாக்கம் கிளை: எண்.78, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை-600 005

நகை கடன் ஏல அறிவிப்பு

எங்களது வங்கியின் கீழ்க்கண்ட கிளையில் நகைக்கடன் பெற்றுள்ள கீழ்க்கண்ட நபருக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள நகைக்கடன் தொகை, தவணை கடந்து நெடுநாட்களாகியும் கடன் தொகையினை செலுத்தி நகைகளை திரும்பப் பெறவில்லை. நோட்டீஸ்கள் பதிவுத்தபாலில் அனுப்பியும் முகவரியில் நபர் இல்லாததால் எங்களுக்கு திரும்ப வந்துவிட்டது.

எனவே இந்த விளம்பரம் கண்டவுடன் அசல் வட்டி மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து **12.06.2018** தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ மதியம் **2.00** மணிக்குள் திருப்பிவிட வேண்டும். **தவறினால் கடனிற்கு ஈடாக வைக்கப்பட்டுள்ள நகைகளை கடன் பெற்றவரின் செலவிலேயே 13.06.2018 தேதி மதியம் 12.00 மணியளவில் வங்கியின் சேப்பாக்கம் கிளை அலுவலகத்தில் வைத்து கிளை அதிகாரி அவர்களால் பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்க ஏலம் விடப்படும்** அல்லது நிர்வாகத்தின் சௌகரியம் போல் மறு ஏல அறிவிப்பு ஏதுமின்றி வேறு தேதிகளில் ஏலம் விடப்படும் என்றும் இதன் வாயிலாக அறிவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கையை மாற்றவோ, ஒத்தி வைக்கவோ கிளை மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். ஏல நிபந்தனைகளை வங்கியின் அறிவிப்பு பலகையில் காணலாம்.

வ.எண்.	கடன் எண்	நகைக்கடன் பெற்றவரின் பெயர் மற்றும் முகவரி	நகையின் எடை கிராமில் (Gross Weight)
1.	179103462000299	**Smt.சரோஜினி சுரேஷ்,** பழைய எண்.23 (புதியது 8/2), அப்துல் கரீம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005.	35

தேதி : 07.06.2018

இடம் : சேப்பாக்கம்

மேலாளர்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

லக்ஷ்மி விலாஸ் வங்கி

காரனோடை கிளை,

சர்வே எண்.103/B, ஸ்ரீதனலட்சுமி வளாகம்,

பஜார் முதன்மை சாலை,GNT சாலை,காரனோடை,சென்னை -67.

தொலைபேசி:044-26330520,26331520

சொத்து சுவாதீன அறிவிப்பு விதி 8 [1]ன் படி

தி லஷ்மி விலாஸ் வங்கி லிமிடெட்டின் சென்னை வட்டார அலுவலகத்திற்கு உட்பட்ட காரனோடை கிளையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அறிவிப்பது யாதெனில் 2002-ஆம் வருடத்திய பத்திரமயமாக்கல் மற்றும் நிதி சொத்துக்கள் மறுசீரமைப்பு மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் விதி 8-ன் கீழ் பிரிவு 13 (12)ன் கீழ் கடன்தாரர் **திரு.A.கார்த்திக், உரிமையாளர்.M/s.பவித்ரா கட்டுமானங்கள் மற்றும்** ஜாமீன்தாரர் **திரு.P.அங்கையன்** ஆகியோர்களுக்கு **13-03-2018** அன்று தேதிய கேட்பு அறிவிப்பின்படி 60 நாட்களுக்குள் வங்கிக்கு வரவேண்டிய கடன் தொகையான **ரூ.10,95,565.30 (ரூபாய் பத்து லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து ஐந்நூற்று அறுபத்து ஐந்து மற்றும் பைசா முப்பது மட்டும்)** மற்றும் **01-03-2018** முதல் மேற்படி தொகைக்கான வட்டி மற்றும் இதர செலவுகள் உட்பட திருப்பி செலுத்துமாறு கோரப்பட்டிருந்தது.

கடன்தாரர், ஜாமீன்தாரர் நோட்டிசில் குறிப்பிட்டபடி கடன் தொகையினை முழுவதுமாக திரும்ப செலுத்த தவறியதால் மேற்கூறிய சட்டத்தின் விதி 8-ன் கீழ்பிரிவு 13(4)-ன் கீழ் மேற்கூறிய **திரு.A.கார்த்திக்** அவர்களுக்கு பாத்தியப்பட்ட அடியிற்கண்ட சொத்தினை அடியிற்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி **02-06-2018** அன்று தனது சுவாதீனத்தில் எடுத்து கொண்டார் என்பதை கடன்தாரர், ஜாமீன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய சட்டத்தின் விதி 8-ன் கீழ்பிரிவு 13-ன் படி கடன்தாரர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கால நேரத்திற்குள் தங்களது சொத்தினை மீட்டு கொள்ளலாம் என்று தங்கள் கவனத்திற்கு இதன் மூலம் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

குறிப்பாக கடன்தாரர், ஜாமீன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கும் கீழே குறிப்பிட்ட சொத்தின் மீது எந்தவிதமான கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் ஈடுபடக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகிறது மற்றும் அவ்வாறு ஏதேனும் செய்தால் அது **தி லஷ்மி விலாஸ் வங்கி லிமிடெட், காரனோடை கிளைக்கு** வரவேண்டிய தொகையான **ரூ.11,12,624.30 (ரூபாய் பதினோரு லட்சத்து பன்னிரண்டாயிரத்து அறநூற்று இருபத்து நான்கு மற்றும் பைசா முப்பது மட்டும்) 01-06-2018** முதல் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கு உட்பட்டதாகும்.

அசையா சொத்தின் விபரம்

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா,ஆத்தூர் கிராமம்,பழைய சர்வே எண்.43/2 பகுதி, மனைவாரி பட்டா எண்.3-ன் படி, சர்வே எண்.95/32-ல் உள்ள மொத்தம் 2,583 சதுர அடி நிலத்தின் தெற்கு பகுதியில் உள்ள 1,295 சதுர அடி நிலம் மற்றும் அதில் உள்ள கட்டிடம்.அதன் எல்லைகள் முறையே வடக்கில்: திரு.வெங்கடேசன் அவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கில்: சாலை,கிழக்கில்:சர்வே எண்.95/33-ல் திரு.பூண்டி முரளி அவர்களுக்கு சொந்தமான நிலம், மேற்கில்:சர்வே எண்.95/28-ல் திரு.ரவி அவர்களுக்கு சொந்தமான நிலம்.இது சென்னை வடக்கு பதிவு மாவட்டம் மற்றும் ரெட்ஹில்ஸ் துணைப்பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.

இடம்:சென்னை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

தேதி:02-06-2018 தி லஷ்மி விலாஸ் வங்கி லிமிடெட்

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்

The Oberoi Group உறுப்பினர்

பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.

Telephone: 91-44-2234 4747; Facsimile: 91-44-2234 6699, 2234 4985

முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு: 7 ஷாம் நாத் மார்க், டெல்லி-110054

Telephone: 91-11-2389 0505; Facsimile: 91-11-2389 0575 Website: www.eihassociatedhotels.in

Email: isdho@oberoigroup.com; invcom@tridenthotels.com CIN: L92490TN1983PLC009903

கம்பெனியின் சமபங்குதாரர்களுக்கு அறிவிப்பு

பொருள்: கம்பெனியின் சாதாரண சமபங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றுதல்

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 124 (6) மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு வைப்பு, தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திருப்பியளித்தல்) விதிகள் 2016 (ஐஇபிஎப் விதிகள்')–ன்படி, தொடர்ந்து ஏழு (7) ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக டிவிடெண்ட் கோரப்படாத அல்லது செலுத்தப்படாத கம்பெனியின் சாதாரண பங்குகளை சட்டப்படி இந்திய அரசின் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (ஐஇபிஎப்) சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்ற வேண்டிய அவசியம் கம்பெனிக்கு உள்ளது என்று இதன் மூலம் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

கம்பெனி பதிவேடுகளின்படி, 2010–11 நிதி ஆண்டு அதாவது 31 மார்ச், 2011ல் முடிந்த நிதி ஆண்டில் கோரப்படாத/செலுத்தப்படாத டிவிடெண்ட் 14 செப்டம்பர், 2018 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ ஐஇபிஎப்–க்கு மாற்றப்படும். 2010–11 நிதி ஆண்டு முதல் 2016–17 நிதி ஆண்டு வரை தொடர்ந்து 7 (ஏழு) ஆண்டுகளுக்கு கோரப்படாத/செலுத்தப்படாத டிவிடெண்ட் தற்போது கம்பெனி வசமுள்ளது.

ஐஇபிஎப் விதிகளின்படி, நிதி ஆண்டு 2010–11 மற்றும் நிதி ஆண்டு 2016–17 வரையிலான டிவிடெண்டை கோருவதற்கு சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அவர்கள் ஒரு கடிதத்தை கையொப்பமிட்டு கம்பெனியின் பங்கு பரிமாற்ற முகவர், இஐஎச் லிமிடெட் முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு, 7 ஷாம் நாத் மார்க், டெல்லி–100 054 அவர்களுக்கு 14 செப்டம்பர், 2018 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ வந்து சேரும்படி அனுப்ப வேண்டும். சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் விவரம் மற்றும் ஐஇபிஎப்–க்கு மாற்றப்பட உள்ள கோரப்படாத சாதாரண சமபங்குகளை வைத்துள்ள சமபங்குதாரர்களின் விவரங்கள் ஆகியவை ''முதலீட்டாளர்கள் தொடர்புகள்'' கீழுள்ள கம்பெனியின் இணையதளம் www.eihassociatedhotels.inல் உள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள தேதிக்குள் அல்லது மத்திய அரசினால் அறிவிக்கப்பட்ட நீட்டிப்பு தேதிக்குள் செல்லத்தக்க கோரிக்கையை முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு பெறாதபட்சத்தில், ஐஇபிஎப் விதிகளின்படி, ஐஇபிஎப்–க்கு பங்குகளை மாற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதை தவிர கம்பெனிக்கு வேறு வழியில்லை.

ஐஇபிஎப் விதிகளின்படி, ஐஇபிஎப் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றுவதற்காக, பங்குதாரர்கள் வைத்துள்ள அசல் பங்கு சான்றிதழ்களுக்கு பதிலாக மாற்று பங்கு சான்றிதழ்களை கம்பெனி வழங்கும் என்பதை தாள் வடிவில் பங்குகளை வைத்துள்ள சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் மற்றும் ஐஇபிஎப் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட உள்ள பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு வழங்கப்படுவதால், அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள அசல் பங்கு சான்றிதழ்கள் தானாகவே ரத்தாகிவிடும். எனவே வர்த்தகம் மேற்கொள்ள முடியாது. ஐஇபிஎப் விதிகளின்படி, ஐஇபிஎப் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றுவதற்காக, கம்பெனி மாற்று பங்கு சான்றிதழ்களை வழங்குவதற்கான போதுமான அறிவிப்பாக கம்பெனி அதன் இணையதளத்தில் படியேற்றம் செய்யப்படும் விவரங்கள் இருக்கும் என்பதை பங்குதாரர்கள் மேலும் கவனிக்க வேண்டும்.

ஐஇபிஎப்–க்கு பங்குகளை மாற்றப்பட்ட பின்னர், ஐஇபிஎப்–லிருந்து மட்டுமே பங்குதாரர்கள் பங்குகளை உரிமை கோர முடியும். அந்த பங்குகள் மீது உரிமை கோர, பங்குதாரர்கள் கீழ்க்கண்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

ஏ) அவ்வப்போது மத்திய அரசினால் பரிந்துரைக்கப்படும் கட்டணத்துடன் இணைய தளம் www.iepf.gov.inல் உள்ள படிவம் ஐஇபிஎப்–5 மூலம் ஆன்லைனில் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

பி) உரிமை கோரிக்கையை சரி பார்ப்பதற்காக படிவம் ஐஇபிஎப்–5ல் குறிப்பிட்டுள்ள அனைத்து ஆவணங்களுடன் ஆன்லைன் விண்ணப்பத்தின் நகல் ஒன்றை கையொப்பமிட்டு கம்பெனிகள் பங்கு பரிமாற்ற முகவர், இஐஎச் லிமிடெட், முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு, 7 ஷாம் நாத் மார்க், டெல்லி–100 054 அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

சி) உரிமை கோரிக்கை படிவம் பெற்ற 15 நாட்களுக்குள் கம்பெனி ஐஇபிஎப் ஆணையத்துக்கு உரிமை கோருபவரால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களையும் சரிபார்ப்பு அறிக்கையுடன் இணைத்து அனுப்பும்.

டி) சரி பார்த்த பின், உரிமை கோரியவருக்கு பங்குகளை ஐஇபிஎப் ஆணையம் நேரடியாக விடுவிக்கும்.

இது குறித்து 1 ஜூன், 2018 தேதியிட்ட தனி அறிவிப்பினை கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் முகவரியினை பதிவு செய்துள்ள சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு கம்பெனி அனுப்பி உள்ளது. மேற்கண்ட விஷயத்தில் பங்குதாரர்களுக்கு சந்தேகம் ஏதேனும் இருப்பின் அது குறித்து கம்பெனிகள் பங்கு பரிமாற்ற முகவர், இஐஎச் லிமிடெட், முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு (ஐஎஸ்டி), 7 ஷாம் நாத் மார்க், டெல்லி–100 054 அல்லது இமெயில் முகவரி isdho@oberoigroup.com, invcom@tridenthotels.com அவர்களை அணுகலாம் அல்லது தொலைபேசி எண் 011–2389 0505ல் தொடர்பு கொள்ளலாம்.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக

இடம்: கொல்கத்தா

இந்த்ராணி ரே

தேதி: 7 ஜூன் 2018

கம்பெனி செயலாளர்